உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# பழனித்தண்டாயுதபாணி பதிகம்.

இஃது

பழனியைச்சார்ந்த தங்கச்சியம்மாள்பட்டி

கருப்பண்ணக் கவுண்டாவர்கள்

வேண்டுகோளின்படிக்கு

ஸ்ரீ சுயம்பிரகாசசுவாமிகள் பரம்பரையில்

திருவையாற்றில் எழுந்தருளிய

சிவாநந்தசுவாமிகள் மாணுக்கருளொருவராகிய

கருவூரைச்சார்ந்த நல்லமாகாளிப்பட்டி

சு-தெய்வசிகாமணிக்குருக்களவர்களால்

இயற்றப்பட்டு,

---

ஷை. கருப்பண்ணக்கவுண்டரவர்களால்

சதாவதானம்

சுப்பிரமணியஐயரவர்களது

சென்னபட்டணம்.

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1880ளு அக்டோபர்மீ.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

தஞ்சைமாநகரம்-சதாவதானம்

ம-ா-ா-ஸ்ரீ

சுப்பிரமணியஐயரவர்களியற்றிய

கட்டளைக்கலித்துறை.

விண்டாவுகாமலர் மீனேடொளிரா
வினன்குடிவாழ்
தண்டாயுதன்பதத் திற்பதிகம்மே
தலையதென்று
கண்டார்மனத்திற் பதிந்திட்டோர்பதி
கம்புனைந்தான்
பண்டானநூலுணர் தெய்வசிகாமணிப்
பாவலனே.

திரிசிரபுரம்-மகாவித்வான்

ம-௱-௱-ஸ்ரீ.

# மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

மாணாக்கர்களிலொருவரும்

தஞ்சைமாநகரம்

கோட்டைக்குள் வடக்குவீதியிலிருக்கின்ற,

மிஷியோன் காலேஜ்-தமிழ்த்தலைமைப்பண்டிதருமாகிய

ம-௱-௱-ஸ்ரீ.

## மு-ஐயாச்சுவாமிபிள்ளையவர்களியற்றிய

———:o:———

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமணியாரரவணியுஞ்சிவபெருமாற்கோங்காரத்
 திறனைக்காட்டக்
குருமணியாயெழுந்தருளும்பழனித்தண்டாயுதனைங்
 குமரன்றாட்குப்
பருமணியாலணிபுரியிற்பழுதுறுமென்றினியதமிழ்ப்
 பாவாலன்பர்க்
கிருமணியாந்தெய்வசிகாமணிக்கவிஞரேனோர்பதிக
 மியற்றினனே.

திருமலைராயன்பட்டினம்.

ம-ா-ா-ஸ்ரீ.

# சோமசுந்தரப்புலவரவர்களியற்றிய

———:o:———

நேரிசையாசிரியப்பா.

சீர்வளர்முனிவர் சித்தரும்போற்றக்
கார்வளர்பொதிகையிற் கவினுறவதியுங்
கும்பமுனிக்கும் அம்பைதுணைக்குஞ்
செம்பொருண்மறையை யின்புறவருளிய
கழனியம்பகத்துக் கருவளைகுமிறும்
பழனியம்பதிக் கிழவனுயமர்
தெண்டாயுதப்பிரான் றிருவருளுருவைச்
சினமுதலியதுக டனையறமாற்றுபு
வினைதபுவாய்மையா மெழுகைப்பத்திப்
புனலொடுவிராஅய்ப் பூசலுற்ற
புனிதநெஞ்சகப் பொற்கோயிலிடைச்
சாந்தாதனத்திற் றகவினிறீஇய
பொற்புக்கேற்ப அற்புதத்தமிழ்ச்சொற்
றென்மணந்தழீஇய பன்மலர்குழீஇ
அன்பினூர்த்தொடுத்த வின்புறுமலங்கல்
வனைந்துபுனைந்தனன் மற்றிவன்யாரெனின்
இருவகையறத்தினர்க் கின்னமுதளிக்குங்
கருணையான்நல்லமா காளிப்பட்டியிற்
சைவசிகாமணி யாயமர்
தெய்வசிகாமணித் திருப்பெயரோனே.

தஞ்சைமாநகரம் வடக்குவீதி.

எஸ். பீ. ஜி. ஸ்கூல் தமிழ் உபாத்தியாயர்

ம-ள-ள-ஸ்ரீ.

## இராமய்யாவஸ்தாது அவர்களியற்றிய

---:0:---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமேவுமணிமார்பன் மலர்மேவுநான்முகனுன்
மறைக்குமெட்டாத்
தூமேவுமருள்பழுத்த பழனித்தண்டாயுதன்றுட்
டுணைக்கன்பாகப்
பாமேவுநற்பதிகம் பகர்ந்தனனன்மாகாளிப்
பட்டிவாழுந்
தேமேவுமறிஞர்புகழ் தெய்வசிகாமணியெனுந்தே
சிகமான்மன்னே.

---

சிவாநந்தசுவாமிகள்
மாணுக்கருளொருவராகிய
தஞ்சைமாநகரம்.
ம-ா-ா-ஸ்ரீ,
ந. வீரபத்திரபிள்ளையவர்களியற்றிய

———:0:———

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீரணிதிருத்தொண்ட ரண்டருந்தெண்டனிடு
தென்பழனியங்கிரியில்வாழ்
தெண்டாயுதக்கடவு ளொண்டாண்மலர்ப்பெருஞ்
சீர்த்தியைக்கோத்தணிபெற
நாரணியெழிற்பஞ்ச நதிவாழ்சிவாநந்த
நாதனடிமலரைமுடிமேல்
நண்ணுதெய்வசிகா மணிக்குரிசிலோர்பதிக
நாட்டினனிதைக்கேட்டிவண்
தாரணியுளீன்றபொழு திற்பெரிதுவப்பினைச்
சார்வர்தம்புதல்வன்றனைச்
சான்றோனெனக்கேட்ட தாயென்றவாப்தர்மொழி
தந்தைக்குமுள்ளமுறையால்
நீரணிகொள்செஞ்சடா டவியின்மதியரவாட
நின்மலனகங்களித்து
நித்தநிகழற்புதப் பொற்பொதுவிலாநந்த
நிர்த்தனஞ்செய்தனனரோ.

சிறப்புப்பாயிரம்
முற்றிற்று.

———

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# பழனித்தண்டாயுதபாணிபதிகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

மாமேவுந் தென்பழனி வாழ்தண்ட பாணியற்குத்
தேமேவு மோர்பதிகஞ் செப்புவாம்—பூமேவும்
வஞ்சமற்ற வன்பர் மனக்கூட மன்னிவளர்
குஞ்சரத்தின் றாட்டுணையைக் கொண்டு.

குருவணக்கம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மதிமேவுபுலவரும்வான் பதிமேவுபுலவருமான்
மகனும்போற்றுங்
கதிமேவுதென்பழனித் தண்டபாணிக்கடவுள்
கழற்றாட்கன்பாய்த்
துதிமேவுமோர்பதிகத்தொடையணிதற்கடியர் குழாஞ்
சூழும்பஞ்ச
நதிமேவுமெங்கள்சிவா நந்த குருபரன்றாளை
நவிற்றல்செய்வாம்.

## நூல்.

### ஆசிரியவிருத்தம்.

திருவளர்தருங்கனக நவமணிகொள்முடிகளுந்
  திருநீறணிந்தநுதலும்
சிட்டர்கடமக்கருள் சிறந்துதவுகண்களுஞ்
  செங்கமலவதனங்களும்
உருவளரும்வேதார்த்த மோதுசெங்கனிவாயு
  மோங்குறுந்திண்டோள்களும்
ஒளிருமுப்புரிநூலு நீபமாலிகையுங்கொ
  ளுரமுமொண்டுகின்மருங்குந்
தெருள்வளருமொலிவளர் சிலம்பணிகொள்தாளுநான்
  றெரிசனஞ்செய்யவருள்வாய்
செய்யனேமெய்யனே யையனேதுய்யனே
  சிங்காரமயில்வையனே
தருவளருநந்தனம் புடைவளருமம்புயத்
  தடமேவுபழனிமலைவாழ்
தண்டாமறைப்பொருளையெண்டோளிறைக்கருள்செய்
  தண்டாயுதக்கடவுளே. (௧)

அத்துவிதமோடுசித் தாந்தமிருபாதமா
  வாரணங்கிண்கிணிகளா
அட்டதிக்காடையா வாருயிர்களுர்தியா
  வன்பர்தோத்திரமாலையாக்
கத்துமீராறுசம யங்களத்தங்களாக்
  கைத்தண்டமெஞ்ஞானமாக்

கதிர்மேவுபன்னிரா தித்தர்களுமொழிவிலாக்
கருணைபொழியுங்கண்களாச்
சுத்தமிகுமூவிரு குணங்களுமுகங்களாத்
துரியநிறைகைவல்யமே
சோதிமணிமகுடமாக் கொண்டுலவுநின் மகிமை
சொல்லவெளியேன்வல்லனோ
சத்தமொடுபொதுமாதர் நித்தமுநடித்திடுந்
தடமேவுபழனிமலைவாழ்
தண்டாமறைப்பொருளையெண்டோளிறைக்கருள்செய்
தண்டாயுதக்கடவுளே. (உ)

பண்ணினுடனின்புகழை யோதவறியேனுனது
பத்திசெய்துய்யவறியேன்
பண்டையடியாரொடும் பழகியறியேன்றுவித
பாவனையகற்றியறியேன்
திண்ணமொடுநின்னு றெழுத்தையொருபோதினுஞ்
சிந்தித்துநிற்கவறியேன்
கிரிசியமெலாம்பொய் யெனக்கண்டுமெய்த்துறவு
சேர்ந்துகதியெய்தவறியேன்
அண்ணலுறுநால்வேத மாவாக்கியப்பொருளை
யயலறத்தேர்ந்துமறியேன்
அகிலமீதருண்மூர்த்தி நீயாதலாலென்னை
யாதரித்துன்றுண்மலர்த்
தண்ணிழலின்வைத்தருள்செய்மண்ணும்விண்ணும்பரவு
தடமேவுபழனிமலைவாழ்

தண்டாமறைப்பொருளை யெண்டோளிறைக்கருள்செய்
 தண்டாயுதக்கடவுளே. (௫)

சுத்தபரிபூரணா முத்தர்தொழுமாரணா
 சுருதிமுடிவளர்காரணா
தொடர்பவவினாசகா குறுமுனியுபாசிகா
 தொண்டருக்கருள்தேசிகா
இத்தனையின்மீதவா வற்றாயரபேதவா
 திக்கெளியசித்தாதவா
எங்கள்பதியென்பதா யும்பர்பணியும்பதா
 வென்னகத்துறுதற்பதா
பத்தர்கணநாதரா சித்தர்புகழாதரா
 பாசாங்குசன்சோதரா
பரமகுருவேயென்று னடிபரவியேநின்று
 பாடவெற்கருள்வையின்று
தத்துமயில்வையனே நித்யமுருகையனே
 தடமேவுபழனிமலைவாழ்
தண்டாமறைப்பொருளையெண்டோளிறைக்கருள்செய்
 தண்டாயுதக்கடவுளே. (௬)

கலைகாட்டி மலையனைய முலைகாட்டியிளமுறுவல்
 காட்டிநற்கன்றுண்டசெங்
கைகாட்டியன்னநடை மெய்காட்டிமுகினேர்
 கருங்குழற்காட்டியிருகண்
வலைகாட்டியறிவழிய வழிகாட்டியிருளன்ன
 வடிவினோடிருகரத்தில்

வலிமையுறுபாசசூலத்தொடுகடாவின்மிசை
வானேறெனச்சினந்து
சிலைகாட்டி வருமறலி நிலைகாட்டுமடவார்கள்
செயல்காட்டிடாதெனக்குன்
சிறடியினைக்காட்டி யாள்வதென்றுரைசெய்தி
சென்னலங்கதிர்கள்விண்ணின்
றலைகாட்டிவளர்செழும் பணைசூழ்வளங்கெழுந்
தடமேவுபழனிமலைவாழ்
தண்டாமறைப்பொருளையொண்டோளிறைக்கருள்செய்
தண்டாயுதக்கடவுளே. (ரு)

உண்மையறியாதவிப் புன்மையேனுறுதுயர
மொன்றல்லவேயையநின்
னுளமறியுமன்றியிவ் வுலகறியுமோவெனக்
குற்றதுணையாருமிலையே
அண்மையிலெனக்குநின் னருடராவிடிலிந்த
வவதியினையாற்றமுடியா
தாதலாலெளியனே னெப்பிழைகள்செய்திடினு
மவையனைத்துஞ்சமைத்து
வண்மைதருகேகயத் தேறியெமதன்னையாம்
வள்ளிநாயகியுமெழில்சேர்
மாதுசுரகுஞ்சரியு மயிலுந்துலங்கவிவண்
வந்தெனகமகிழும்வண்ணந்
தண்மையுறுநின்பதாம் புயசேவைதந்தருள்செய்
தடமேவுபழனிமலைவாழ்

தண்டாமறைப்பொருளை யெண்டோளிறைக்கருள்செய்
 தண்டாயுதக்கடவுளே. (௬)

சுந்தரக்கருணைமும் மதமாரிபொழிதருந்
 தும்பிமுகவன்சோதரா
சுருதிமுடியின்பொருளை யமலனுக்கருள்செய்த
 சோதிப்ரபோதநாதா
முந்தமரர்தந்துய ரொழித்தின்பமுறவைத்த
 மொய்ம்புறுமயிற்கைவீரா
முற்றுமுணர்வேதியா வெற்றிபுனைநீதியா
 முருகாமுராரிமருகா
அந்தநடுமுதலெனும் பந்தசங்கற்பங்க
 ளணுகுருத்துரியரூபா
அஸ்திபாதிப்பிரிய நித்யகருணாகரா
 அறுமுகாவென்றிவ்வணம்
சந்ததமுநின்றுதி புரிந்திடற்கருள்செய்தி
 தட்மேவுபழனிமலைவாழ்
தண்டாமறைப்பொருளை யெண்டோளிறைக்கருள்செய்
 தண்டாயுதக்கடவுளே. (௭)

வாரேறுகொங்கைமட் வார்மையலாற்சூறை
 வளியேறுபஞ்சாகவென்
மனமேறிமதியின்றி வாணாள்கழிந்துவெம்
 மறலிவந்தணுகுமுன்
சிரேறுதத்வசிர வணமனனமொடுநிதித்
 தியாசனப்படியிலேறித்

திடமுறுசமாதிசாட் சாத்காரநிலையையுஞ்
சிறுவனேனடையவருள்வாய்
காரேறுமலையனருள் கற்பகத்தாருவாங்
கௌமாரியுதவுகனியே
கற்றேறுமுத்தரித யத்தேறுமத்தனே
கடியேறுநெடியநீபத்
தாரேறுபன்னிரு புயாசலத்தெய்வமே
தடமேவுபழனிமலைவாழ்
தண்டாமறைப்பொருளையெண்டோளிறைக்கருள்செய்
தண்டாயுதக்கடவுளே. (௮)

பூதமுதனாதவரை யாவுங்கடந்துபரி
பூரணவெளிக்குளேகிப்
புத்தமலிநின்கருணை யாநந்தபோகம்
புசித்திளைப்பாறவருள்வாய்
வேதமுடனாகம புராணகலையாலுமள
விடவரியதுரியவடிவே
விஞ்சுமலவிருளகல வெழுஞானபானுவே
வேற்கரச்சேயெனக்
காதலொடுதுகிபுரிந் தினியபால்சர்க்கரைக்
காவடிகளுங்கொணர்ந்து
காணிக்கைபலவுஞ் செலுத்துமெய்யன்பருங்
கவிவாணர்புவிவாணருஞ்
சாதனமுதிர்ந்தபெரி யோருமுறைமுறைபரவு
தடமேவுபழனிமலைவாழ்

தண்டாமறைப்பொருளையெண்டோளிறைக்கருள்செய்
தண்டாயுதக்கடவுளே. (கூ)

கூற்றனைநிகர்த்துவரு தோற்றமெனுநாரியர்கள்
கொண்டைமுடியளகத்திலே
குயிலொத்தமொழியிலே யயிலொத்தவிழியிலே
கோவையங்கனிவாயிலே
சிற்றுவெண்ணகையிலே நாற்றுமிருசெவியிலே
திண்ணமுலைவண்ணத்திலே
கிளர்தந்தினிடையிலே வளர்தந்திநடையிலே
கேழ்நெடுந்துகிலணியிலே
ஆற்றலொடுநாடியேழ் தோற்றத்திலாளாம
லறிவாணர்சங்கத்திலே
அக்கமணிநீற்றிலே மிக்கமறையீற்றிலே
அனுதினமுநினதுதுதியைச்
சாற்றிடுந்தொழிலிலே மனனிற்கவருள்செய்தி
தடமேவுபழனிமலைவாழ்
தண்டாமறைப்பொருளை யெண்டோளிறைக்கருள்செய்
தண்டாயுதக்கடவுளே. (க0)

உண்மையொடுவெண்ணீ றணிந்துகண்மணிபுனைந்
துயர்சைவநெறியைமருவி
உனதுதிருநாமவக் கரமாறுநெஞ்சகத்
துன்னியேகாக்கிரமதாய்த்
திண்மையுறுசாதுசங் கத்தோடிணங்கிநின்
சேவடித்துதியையன்பாச்

செந்தமிழ்ப்பாவா னிதம்பாடியானெனது
  தீர்ந்துய்யவருள்புரிகுவாய்
வெண்மணிச்சுடர்காலு மாடமாளிகையுயர்
  விசும்புறவிளங்குமழகும்
விகசிதமிகுந்தபன் முழவொலியுமூழ்கினோர்
  வேண்டியவரத்தைநல்கும்
சண்முகநதிப்புனலு மேவுபல்வளமல்கு
  தட..மேவுபழனிமலைவாழ்
தண்டாமறைப்பொருளை யெண்டோளிறைக்கருள்செய்
  தண்டாயுதக்கடவுளே. (கக)

பழனித்தண்டாயுதபாணி பதிகம்

முற்றிற்று.

---

## வாழி.

கண்டிகைவெண் பொடிவாழ்க வுலகம்வாழ்க
  கரிமுகன்றாள் வாழ்கநுதற் கண்ணன்வாழ்க
எண்டிசைக்குந் தாயான வுமையாள்வாழ்க
  வென்னாவி லிருந்துரைத்த வாணிவாழ்க
மண்டலத்தி லிப்பதிகங் கற்றோர்கேட்டோர்
  மகிழ்ச்சியுடன் வாழ்கவரு மறைநூல்வாழ்க
அண்டர்தொழுந் தென்பழனித் தண்டபாணி
  அடியிணைக ளெஞ்ஞான்றும் வாழ்கமன்றோ

---:0:---